# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2397/69 - 2024 අගෝස්තු මස 16 වැනි සිකුරාදා - 2024.08.16

*2397/69 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 16 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

**2021 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க கொழும்புத் துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழுச் சட்டம்**

53 ஆம் பிரிவின் கீழான கட்டளை

2021 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க கொழும்புத் துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தின் 53 ஆம் பிரிவினால் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் அடிப்படையில், கொழும்புத் துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழுவின் பரிந்துரைகளை பரிசீலித்த முதலீட்டு மேம்பாட்டு அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க ஆகிய நான் அமைச்சரவையின் அங்கீகாரத்தின் பேரில், இந்தக் கட்டளையின் மூலம் பின்வருவனவற்றை குறிப்பீடு செய்கிறேன்.

(அ) 2024, ஓகத்து 12 ஆந் திகதிய 24/1596/631/042 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் மூலம் அமைச்சரவையானது, இங்கே அட்டவணை I இல் குறிப்பிடப்பட்டுள்ள அதிகாரமளிக்கப்பட்ட நபரின் வணிகத்தை செயல்நுணுக்க முக்கியத்துவம் வாய்ந்த முதன்மை வணிகமாக நியமிப்பதற்கு அங்கீகாரம் அளித்துள்ளது ;

(ஆ) அத்தகைய வணிகத்தை செயல்நுணுக்க முக்கியத்துவம் வாய்ந்த முதன்மை வணிகமாகக் கருதுவதற்கான காரணம் இங்கே அட்டவணை II இல் குறிப்பிடப்பட்டுள்ளது;

(இ) இச்சட்டங்களின் கீழ் வழங்கப்பட்ட விலக்களிப்புக்கள் அல்லது ஊக்குவிப்புக்கள் இங்கே அட்டவணை III இல் குறிப்பிடப்பட்டுள்ளபடி இருக்க வேண்டும்; அத்துடன்

(ஈ) குறிப்பிடப்பட்ட சட்டவாக்கங்களின் கீழ் வழங்கப்பட்ட விலக்களிப்புக்கள் அல்லது ஊக்குவிப்புக்கள் இங்கே அட்டவணை IV இல் குறிப்பிடப்பட்டுள்ள திகதிகளில் செயல்படத் தொடங்குவதும் நடைமுறையில் இல்லாதொழிதலும் வேண்டும்.

**ரணில் விக்கிரமசிங்க,**
முதலீட்டு மேம்பாட்டு அமைச்சர்.

கொழும்பு,
2024, ஓகத்து 15.


1A - PG 6829 — 312 (2024/08)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**அட்டவணை I**

**செயல்நுணுக்க முக்கியத்துவம் வாய்ந்த முதன்மை வணிகமாக நியமிக்கப்பட்ட வணிகத்தின் விபரங்கள்**

| | |
|---|---|
| 1. அதிகாரமளிக்கப்பட்ட நபரின் பெயர் | கொழும்பு மெரினா டெவலப்மன்ட் (பிரைவேட்) லிமிடட் (COLOMBO MARINA DEVELOPMENT (PRIVATE) LIMITED) |
| 2. உரிம இல. | 2403200055 |
| 3. உரிமம் வழங்கப்பட்ட திகதி | 2024, மே 03<br>வணிகம் தொடங்கும் திகதியானது உரிமம் வழங்கப்பட்ட நாளிலிருந்து 6 மாதங்களுக்குள் இருக்க வேண்டும் (2022 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க அதிகாரளிக்கப்பட்ட நபர்களின் பதிவுசெய்தல், உரிமம் வழங்குதல், அதிகாரமளித்தல் மற்றும் ஏனைய அங்கீகாரங்களுக்கான ஒழுங்குவிதிகளின் 27 ஆம் ஒழுங்குவிதியைப் பார்க்கவும் |
| 4. கரைகடந்த கம்பனி பதிவு இலக்கம்: | PCC00297629 |
| 5. செயல்நுணுக்க முக்கியத்துவம் வாய்ந்த வணிகத்தின் வகைப்பாடு | செயல்நுணுக்க முக்கியத்துவம் வாய்ந்த முதன்மை வணிகம் |
| 6. விலக்களிப்புக்கள் அல்லது ஊக்குவிப்புகளுக்கான தகவுடமை | COLOMBO MARINA DEVELOPMENT (PRIVATE) LIMITED என்பது செயல் நுணுக்க முக்கியத்துவம் வாய்ந்த முதன்மை வணிகமாக மட்டுமே நியமிக்கப்பட்டுள்ளதுடன் செயல்நுணுக்க முக்கியத்துவம் வாய்ந்த இரண்டாம் நிலை வணிகமாக நியமிக்கப்படுவதற்கு தகுதிபெறமாட்டாது. |
| 7. தகைமை தகுதி விதி | 2023, ஓகத்து 04 ஆந் திகதிய 2343/60 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட, 2023 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, கொழும்புத் துறைமுக நகர (செயல்நுணுக்க முக்கியத்துவம் வாய்ந்த வணிகங்களுக்கு விலக்களிப்புக்கள் அல்லது ஊக்குவிப்புக்களை வழங்குவதற்கான வழிகாட்டுநெறிகள்) ஒழுங்குவிதிகளின் 2(ஆ) ஒழுங்குவிதியில் குறிப்பிடப்பட்டுள்ள தகுதி விதிகள். |
| 8. ஏற்புடைய விலக்களிப்பு அல்லது ஊக்குவிப்புத் திட்டம் | 2023 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க கொழும்புத் துறைமுக நகர (செயல்நுணுக்க முக்கியத்துவம் வாய்ந்த வியாபாரங்களுக்கு விலக்களிப்புக்கள் அல்லது ஊக்குவிப்புக்களை வழங்குவதற்கான வழிகாட்டுநெறிகள்) ஒழுங்குவிதிகளின் 3(1)(அ) ஒழுங்குவிதியில் குறிப்பிடப்பட்டுள்ள திட்டம். |

**அட்டவணை II**

**செயல்நுணுக்க முக்கியத்துவம் வாய்ந்த முதன்மை வணிகமாக கருத்தில் கொள்வதற்கான காரணம்**

2021 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தின் 5 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு, கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழுவின் குறிக்கோள்கள், மேற்படி சட்டத்தின் பிரிவு 53(5) இல் கூறப்பட்டுள்ளவாறு தேசிய நலனை அல்லது தேசிய பொருளாதாரத்தின் முன்னேற்றத்தை கருத்தில் கொண்டு, கொழும்பு துறைமுக நகரத்தை நிறுவுவதன் வெற்றியை உறுதி செய்வதற்காக, வணிகத்தை செயல்நுணுக்க முக்கியத்துவம் வாய்ந்த முதன்மை வணிகமாக நியமிப்பது தொடர்பாக பரிசீலிக்கப்பட்டது.

COLOMBO MARINA DEVELOPMENT (PRIVATE) LIMITED இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட ஒரு நிறுவனம் என்பதுடன், பிரவுன்ஸ் இன்வெஸ்ட்மென்ட் பிஎல்சிக்கு (Browns Investment PLC) முழுமையாக சொந்தமானதாகும். கொழும்புத் துறைமுக நகரத்தின் அதிகாரப் பகுதிக்குள் மெரினா அபிவிருத்தி திட்டத்திற்காக 1-02-07, 1-02-08, 1-02-09 மற்றும் 1-02-10 ஆகிய 4 காணி துண்டங்களை குத்தகைக்கு எடுத்துள்ளது. 2021, திசெம்பரில் வெளியிடப்பட்ட தகவல்களின்படி, மேற்படி நிலத் துண்டுகளுக்காக செய்யப்பட்ட முதலீடு இலங்கை ரூபா. 11,129 மில்லியன் (ஐ.அ.டொ. 36 மில்லியன்) மற்றும் அபிவிருத்திக்காக வெளிநாட்டு நேரடி முதலீடாக மேலும் ஐ. அ. டொ. 75 மில்லியன் கம்பனியினால் செலுத்தப்படும். இதன் விளைவாக மொத்த முதலீடு சுமார் ஐ. அ. டொ. 111 மில்லியனாகும்.

இவ்வாறு, 2023 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க கொழும்புத் துறைமுக நகர (செயல்நுணுக்க முக்கியத்துவம் வாய்ந்த வணிகங்களுக்கு விலக்களிப்புக்கள் அல்லது ஊக்குவிப்புக்களை வழங்குவதற்கான வழிகாட்டுநெறிகள்) ஒழுங்குவிதிகளின் 2(ஆ) ஒழுங்குவிதியின் படி மெரினா உட்கட்டமைப்புக்கான நிலத்தில் குறைந்தபட்சம் இருபத்தைந்து மில்லியன் ஐ. அ. டொ. முதலீடு செய்ய வேண்டும் என்ற தகுதிவிதியை COLOMBO MARINA DEVELOPMENT (PRIVATE) LIMITED பூர்த்தி செய்கிறது.

மெரினா வசதிகளானது, 243 கப்பல்கள் மற்றும் முழு கொள்ளளவு கொண்ட ஒரு கெபிடனேரி (Capitainerie) (மெரினா நிர்வாகம் மற்றும் கட்டுப்பாட்டு மையம்), கிளப் ஹவுஸ் உட்பட விருந்தினர்களுக்கான கிளப் அறைகள், உணவு மற்றும் பானங்கள் உள்ளிட்ட சில்லறை விற்பனை நிலையங்கள் மற்றும் பொழுதுபோக்கு இடங்கள், நிகழ்வுகளுக்கான இடங்கள் மற்றும் வாகன தரிப்பிடங்கள் ஆகியவற்றை உள்ளடக்கியதாக வடிவமைக்கப்பட்டுள்ளது. வசதி படைத்த பார்வையாளர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக வடிவமைக்கப்பட்ட வசதிகள் மற்றும் சேவைளை உள்ளடக்கிய விரிவான தொகுப்பை இந்த இடங்கள் வழங்கும். நான்கு காணித் துண்டங்களின் அபிவிருத்தியானது, ஏறக்குறைய 20,000 சதுர மீட்டர் கட்டப்பட்ட இடங்களின் மொத்தப் பரப்பளவை உள்ளடக்கும். இது பல்வேறு வகையான பொழுதுபோக்கு, கொள்வனவு மற்றும் நகர்ப்புற வசதிகளை வழங்குவதுடன் இலங்கையின் ஒட்டுமொத்த சுற்றுலா அனுபவத்தை கணிசமாக மேம்படுத்தும். இந்த செயல்நுணுக்க அணுகுமுறை, சுற்றுலாச் செலவினங்களை அதிகரிக்க வழிவகுப்பதுடன், மேலும் நாட்டின் அந்நிய செலாவணி வருமானத்தில் பங்களிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மெரினா அபிவிருத்திக் கருத்திட்டம் அதன்பல்வேறு கட்டங்களில் குறிப்பிடத்தக்க வேலை வாய்ப்புகளை உருவாக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. நிறுவனம் செயற்படத் தொடங்கிய முதல் வருடத்திற்குள் சுமார் 50 நபர்களை வேலைக்கு அமர்த்த உத்தேசித்துள்ளது. கருத்திட்டம் நிறைவடைந்ததும், மெரினாவின் சில்லறை வணிகங்கள் மற்றும் பிற முயற்சிகள் பல நிரந்தர வேலைகளை உருவாக்கும் என்று எதிர்பார்க்கப்படுவதுடன் இது நீண்ட கால பொருளாதார வளர்ச்சிக்கு பங்களிக்கிறது.

**அட்டவணை III**

**சட்டவாக்கங்களின் கீழ் வழங்கப்படுகின்ற விலக்களிப்புக்கள் அல்லது ஊக்குவிப்புகள்**

| சட்டத்தின் அட்டவணை II இன்கீழ் பட்டியலிடப்பட்டவாறான சட்டவாக்கங்கள் | வழங்கப்படுகின்ற விலக்களிப்புக்கள் அல்லது ஊக்குவிப்புக்கள் |
|---|---|
| 1. 2017ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, உள்நாட்டு இறைவரிச் சட்டம் | அ) பகிர்ந்தளிக்கப்படுகின்ற அனைத்து வருமானம், இலாபங்கள் மற்றும் பங்கிலாபங்கள் முதல் இருபத்தைந்து ஆண்டுகளுக்கு இந்தச் சட்டத்தின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து வரிகளிலிருந்தும் விலக்களிக்கப்படும்;<br>ஆ) மேற்கொள்ளப்படுகின்ற அனைத்துக் கொடுப்பனவுகளும் முதல் இருபத்தைந்து ஆண்டுகளுக்கு இநதச் சட்டத்தின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள நிறுத்திவைத்தல் வரியிலிருந்து விலக்கு அளிக்கப்படும்;<br>இ) மேற்கூறிய இருபத்தைந்து ஆண்டு காலம் முடிவடைந்த பிறகு, இந்தச் சட்டத்தின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள நடைமுறையில் உள்ள நிறுவன வரி விகிதத்தில் இருந்து 50% ஊக்கத்தொகை பத்து வருட காலத்திற்கு வழங்கப்படும். |
| 2. 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, பெறுமதி சேர் வரிச் சட்டம் | ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட வணிகம் தொடர்பான பொருட்கள் மற்றும் சேவைகளின் அனைத்து இறக்குமதிகள் மற்றும் உள்நாட்டு கொள்வனவுகள், இந்தச் சட்டத்தின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள வரிகளிலிருந்து விலக்கு அளிக்கப்படும். |
| 3. 2002 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, நிதிச் சட்டம் | இந்தச் சட்டத்தின் அனைத்து ஏற்பாடுகளிலிருந்தும் விலக்களிக்கப்படும். |
| 4. 2005 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, நிதிச் சட்டம் | இந்தச் சட்டத்தின் அனைத்து ஏற்பாடுகளிலிருந்தும் விலக்களிக்கப்படும். |
| 5. 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, உற்பத்தித் தீர்வை (விசேட ஏற்பாடுகள்) சட்டம் | ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட வணிகம் தொடர்பான பொருட்களின் அனைத்து இறக்குமதிகள் மற்றும் உள்ளூர் கொள்வனவுகள், இந்தச் சட்டத்தின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து வரிகள், தீர்வைகள் மற்றும் அறவீடுகளிலிருந்து விலக்கு அளிக்கப்படும். |

| சட்டத்தின் அட்டவணை II இன்கீழ் பட்டியலிடப்பட்டவாறான சட்டவாக்கங்கள் | வழங்கப்படுகின்ற விலக்களிப்புக்கள் அல்லது ஊக்குவிப்புக்கள் |
|---|---|
| 6. சுங்கக் கட்டளைச் சட்டம் (அத்தியாயம் 235) | ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட வணிகம் தொடர்பான பொருட்கள் மற்றும் சேவைகளின் அனைத்து இறக்குமதிகளும், இந்தச் சட்டத்தின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து வரிகள், தீர்வைகள் மற்றும் அறவீடுகளிலிருந்து விலக்கு அளிக்கப்படும். |
| 7. 2011 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க, துறைமுகங்கள் மற்றும் விமான நிலைய அபிவிருத்தி அறவீட்டுச் சட்டம் | ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட வணிகம் தொடர்பான பொருட்களின் அனைத்து இறக்குமதிகளும் இச்சட்டத்தின் கீழ் குறிபிடப்பட்டுள்ள அனைத்து வரிகள், தீர்வைகள் மற்றும் அறவீடுகளிலிருந்து விலக்கு அளிக்கப்படும். |
| 8. 1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டம் | ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட வணிகம் தொடர்பான பொருட்களின் அனைத்து இறக்குமதிகளும் இச்சட்டத்தின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து வரிகள், தீர்வைகள் மற்றும் அறவீடுகளிலிருந்து விலக்கு அளிக்கப்படும். |
| 9. 1988 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, பந்தய மற்றும் சூதாட்ட விதிப்பனவுச் சட்டம் | இந்த சட்டத்தின் கீழ் விலக்களிப்பு அல்லது ஊக்குவிப்பு எதுவும் வழங்கப்படமாட்டாது. |
| 10. 1971 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க, வேலையாட்களின் தொழிலை முடிவுறுத்தல் (விசேட ஏற்பாடுகள்) சட்டம் | இந்தச் சட்டத்தின் அனைத்து ஏற்பாடுகளிலிருந்தும் விலக்களிக்கப்படும். |
| 11. கேளிக்கை வரி கட்டளைச் சட்டம் (அத்தியாயம் 267) | இந்தச் சட்டத்தின் கீழ் விலக்களிப்பு அல்லது ஊக்குவிப்பு எதுவும் வழங்கப் படமாட்டாது. |
| 12. 2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டம் | 2022, யூன் 3 ஆந் திகதிய 2282/59 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 2022 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணி (கொழும்புத் துறைமுக நகரத்தில் முதலீடுகள்) ஒழுங்குவிதிகள் நீங்கலாக இச்சட்டத்தின் அனைத்து எற்பாடுகளிலிருந்தும் விலக்களிக்கப்படும். |
| 13. 2010 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, சீட்டாட்டத் தொழில் (ஒழுங்குபடுத்தல்) சட்டம் | இந்தச் சட்டத்தின் கீழ் எந்த விலக்களிப்பு அல்லது ஊக்குவிப்பு வழங்கப்படமாட்டாது. |

**அட்டவணை IV**

**வழங்கப்படுகின்ற விலக்களிப்புக்கள் அல்லது ஊக்குவிப்புக்களின் செல்லுபடியாகும் காலம்**

| சட்டத்தின் அட்டவணை II இல் பட்டியலிடப்பட்டவாறான சட்டவாக்கங்கள் | ஆரம்பிக்கின்ற திகதி | முடிவடைகின்ற திகதி |
|---|---|---|
| 1. 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, உள்நாட்டு இறைவரிச் சட்டம் | 2024, செத்தெம்பர் 01 | 2049, ஓகத்து 31 |
| 2. 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, பெறுமதிசேர் வரிச் சட்டம் | 2024, செத்தெம்பர் 01 | 2049, ஓகத்து 31 |
| 3. 2002 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, நிதிச்சட்டம் | 2024, செத்தெம்பர் 01 | 2049, ஓகத்து 31 |
| 4. 2005 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, நிதிச்சட்டம் | 2024, செத்தெம்பர் 01 | 2049, ஓகத்து 31 |
| 5. 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, உற்பத்தித் தீர்வை (விசேட ஏற்பாடுகள்) சட்டம் | 2024, செத்தெம்பர் 01 | 2049, ஓகத்து 31 |

| சட்டத்தின் அட்டவணை II இல் பட்டியலிடப்பட்டவாறான சட்டவாக்கங்கள் | ஆரம்பிக்கின்ற திகதி | முடிவடைகின்ற திகதி |
|---|---|---|
| 6. சுங்கக் கட்டளைச் சட்டம் (235 ஆம் அத்தியாயம்) | 2024, செத்தெம்பர் 01 | 2049, ஓகத்து 31 |
| 7. 2011 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க, துறைமுகங்கள் மற்றும் விமான நிலைய அபிவிருத்தி அறவீட்டுச் சட்டம் | 2024, செத்தெம்பர் 01 | 2049, ஓகத்து 31 |
| 8. 1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டம் | 2024, செத்தெம்பர் 01 | 2049, ஓகத்து 31 |
| 9. 1988 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, பந்தய, சூதாட்ட விதிப்பனவுச் சட்டம் | ஏற்புடையதல்ல | ஏற்புடையதல்ல |
| 10. 1971 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க, வேலையாட்களின் தொழிலை முடிவுறுத்தல் (விசேட ஏற்பாடுகள்) சட்டம் | 2024, செத்தெம்பர் 01 | 2049, ஓகத்து 31 |
| 11. கேளிக்கை வரிக் கட்டளைச் சட்டம் (267 ஆம் அத்தியாயம்) | ஏற்புடையதல்ல | ஏற்புடையதல்ல |
| 12. 2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டம் | 2024, செத்தெம்பர் 01 | 2049, ஓகத்து 31 |
| 13. 2010 ஆம் ஆண்டின் 17ஆம் இலக்க, சீட்டாட்டத் தொழில் (ஒழுங்குபடுத்தல்) சட்டம் | ஏற்புடையதல்ல | ஏற்புடையதல்ல |

EOG 08-0204

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.